பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 01 2025 **WEDNESDAY** **7.15 PM**

## தலைப்புச் செய்திகள்

1. புத்தாண்டின் முதலாவது அமைச்சரவைக்கூட்டம் விவசாயிகள் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியா – பாகிஸ்தான் சிறைகளில் உள்ள கைதிகள் மற்றும் மீனவர்கள் குறித்த விவரங்களின் பரஸ்பர பரிமாற்றம் இன்று நடைபெற்றது.

3. நாட்டின் முதலாவது லோக்பால் தினம் வரும் 16-ஆம் தேதி கடைபிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4. வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு 14 ரூபாய் 50 காசு குறைக்கப்பட்டுள்ளது.

5. மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>>

விவசாயிகள் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இன்று புதுதில்லியில் நடைபெற்ற புத்தாண்டின் முதலாவது அமைச்சரவைக்கூட்டம் விவசாயிகள் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

விவசாயிகளின் வளமான வாழ்விற்கு வகை செய்யும் முடிவுகள் இந்த அமைச்சரவைக்கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

பயிர் காப்பீடு மற்றும் உரமானியம் நீட்டிப்பு இதில் அடங்கும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்த அமைச்சரவைக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த திட்டங்கள் குறித்து விளக்கினார்.

பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அடுத்த நிதியாண்டு இறுதிவரை நீட்டிக்க இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

69 ஆயிரத்து 515 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

**DAP** உர மானியம் வழங்குவதற்காக செயல்பாட்டில் உள்ள சிறப்பு தொகுப்புத் திட்டத்தை மறு உத்தரவு வரும் வரை நீட்டிப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக நடப்பாண்டில் 3 ஆயிரத்து 850 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

824 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவில் இந்த நிதியம் ஏற்படுத்தப்படுவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>>

விவசாயிகள் நலனுக்காக மத்திய அமைச்சரவை மேற்கொண்ட மூன்று முக்கிய முடிவுகளுக்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள காணொளி பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், புத்தாண்டின் முதலாவது அமைச்சரவைக்கூட்டம் விவசாயிகள் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருப்பதை இது வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகள் நலனில் மத்திய அரசு அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது என்பதையே இது உணர்த்துவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>>**

சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு **Kinjarapu Ram Mohan Naidu,** கடந்த இரண்டு மாதங்களாக விமான நிறுவனங்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார்.

பனிமூட்டம் காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்படுவதை தடுப்பது குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

காலதாமதங்களை தவிர்க்கவும், சீரான விமான போக்குவரத்தை உறுதி செய்வதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று மணி நேரத்திற்குமேல் தாமதம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட விமான சேவையை ரத்து செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>>**

இந்தியா – பாகிஸ்தான் சிறைகளில் உள்ள கைதிகள் மற்றும் மீனவர்கள் குறித்த விவரங்களின் பரஸ்பர பரிமாற்றம் இன்று நடைபெற்றது.

இருநாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்த விவரங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, இந்திய சிறைகளில் பாகிஸ்தானை சேர்ந்த 81 மீனவர்கள் மற்றும் 381 கைதிகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சிறைகளில் இந்தியாவை சேர்ந்த 217 மீனவர்களும், 49 கைதிகளும் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>>**

நாட்டின் முதலாவது லோக்பால் தினம் வரும் 16-ஆம் தேதி கடைபிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெறவுள்ள இதற்கான விழாவில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

லோக்பால் அமைப்பிற்கான அறிவிக்கை 2014-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ஆம் தேதி வெளியிடப்பட்டதை குறிக்கும் வகையில், இந்த தினம் கடைபிடிக்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<<<<>>>>>**

காபி ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் 8 மாதத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு காபி ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இத்தாலி, ரஷ்யா, ஜெர்மனி, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்டிற்கு அதிக அளவு காபி ஏற்றுமதி செய்யப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் எட்டாவது பெரிய காபி உற்பத்தி நாடாக இந்தியா உள்ளது என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>>**

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு 14 ரூபாய் 50 காசு குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை தில்லியில் ஆயிரத்து 804 ரூபாயாகவும், மும்பையில் ஆயிரத்து 756 ரூபாயாகவும், கொல்கத்தாவில் ஆயிரத்து தொள்ளாயிரத்து 11 ரூபாயாகவும், சென்னையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து 66 ரூபாயாகவும் உள்ளது.

விமான எரிபொருளுக்கான விலையும் ஒரு கிலோ லிட்டருக்கு ஆயிரத்து 401 ரூபாய் 37 காசாக குறைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

புதுதில்லியில் நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பு பேரணியை பார்வையிடுவதற்கான அனுமதி சீட்டு விற்பனை நாளை முதல் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

11-ஆம் தேதிவரை அனுமதி சீட்டுகளை காலை 9 மணிமுதல் பெற்றுக்கொள்ளலாம் என்று பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

படைகள் பாசறை திரும்புவதற்கான அணிவகுப்பு நிகழ்ச்சியையும், அதற்கான ஒத்திகை நிகழ்ச்சியையும் பார்வையிடுவதற்கான அனுமதி சீட்டு விற்பனையும் நாளை தொடங்க உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடியரசு தின அணிவகுப்பை பார்வையிடுவதற்கான அனுமதி சீட்டுகள் 20 மற்றும் 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என்றும், படைகள் பாசறை திரும்புவதற்கான நிகழ்ச்சியை பார்வையிடுவதற்கான அனுமதி சீட்டு 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒத்திகை நிகழ்ச்சியை பார்வையிடுவதற்கான அனுமதி சீட்டுகள் 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

மகா கும்பமேளா உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் வரும் 13-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 26-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

45 கோடிக்கும் மேற்பட்டோர் இதனை பார்வையிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனை பார்வையிடுபவர்களின் நலனுக்காக தொழில்நுட்பங்கள் கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றன.

இந்த கும்பமேளாவின் ஒரு பகுதியாக ட்ரோன் காட்சியும் நடைபெறவுள்ளது.

2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ட்ரோன்கள் இதில் பங்கேற்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

குஜராத்தில் **Banaskantha** மாவட்டத்தை பிரித்து, புதிய மாவட்டத்தை உருவாக்க அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று காந்தி நகரில் முதலமைச்சர் திரு புபேந்தர் பாட்டீல் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த அம்மாநில அமைச்சர் திரு **Rushikesh Patel** 34-ஆவது மாவட்டமாக இந்த புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**Vav Tharad** என்ற பெயரில் இந்த புதிய மாவட்டம் செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒன்பது நகராட்சிகளுக்கு, மாநகராட்சி அந்தஸ்து வழங்கவும் அமைச்சரவைக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக திரு **Rushikesh Patel** கூறினார்.

<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் 11 நக்சலைட்டுகள் இன்று காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

**Gadchiroli** காவல்துறை தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் முன்னிலையில் அவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், வட **Gadchiroli** நக்சலைட் பிரச்சினையிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தெற்கு **Gadchiroli** –யும் நக்சலைட் பாதிப்பிலிருந்து விரைவில் முழுமையாக மீட்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த சில ஆண்டுகளில் மகாராஷ்ட்ராவில் நக்சலைட் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்தார்.

<<<<>>>>>

பஞ்சாபில் சுகாதார சேவைகளை பொதுமக்கள் எளிதாக பெரும் நோக்கில், கைபேசி செயலி ஒன்றை அம்மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த செயலியை பயன்படுத்தி, சுகாதார காப்பீட்டுத் திட்டங்களின் பலன்களை பெறுவதற்கான தகுதியை அறிந்துகொள்ளலாம் என்று அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் பல்பீர் சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், இணைந்துள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் பட்டியலும் இந்த செயலி மூலம் எளிதாக அறிந்துகொள்ள முடியும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

சோலாப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட **Maindargi** பகுதியில் யாத்ரிகர்களை ஏற்றி சென்றுகொண்டிருந்த ஜீப், லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆறாவது இடத்தில் இருந்த அவர், 665 புள்ளிகளை பெற்று, ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளார்.

-------------------

உலக **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வைஷாலி வெண்கலப்பதக்கம் வென்றார்.

நியூயார்க்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<>>>>>